தேதி - 25.08.2025.

**GWOP**.65/2021 **and GWOP**.133/2021

ம.சா.1 - திருமதி.சுந்தம்மாள்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை

எனக்கு 55 வயது. என்னுடைய கணவருக்கு வயது 65 இருக்கும். விபத்தில் இறந்த சிவராஜ் என்னுடைய மூத்த மகன். சரவணன், சிவராஜ்ஜின் தம்பி. சரவணனுக்கு திருமணம் ஆகி 2 குழந்தைகள் உள்ளனர். சரவணன் கூலி வேலை செய்து வருகிறார் என்று சொன்னால் கொத்தனார் வேலை செய்து வருகிறார். சரவணன் 9ம் வகுப்பு படித்துள்ளார். அது நிரந்தர வேலை அல்ல என்று சொன்னால் அது சரியல்ல. எனது 3வது மகன் பெயர் சுந்தரபாண்டி. அவர் CRPF-ல் வேலை பார்க்கிறார். அவருக்கு திருமணம் ஆகி 2 குழந்தைகள் உள்ளது. அவர் பணியிடத்தில் தான் குடியிருக்க முடியும். தற்போது அவர் அசாமில் பணிபுரிகிறார். நானும் என் கவணவரும் விவசாய கூலி வேலை செய்து வருகிறோம். சிவராஜ் தீயணைப்பு மீட்பு துறையில் பணிபுரிந்து வந்தார். அவர் தனிக்குடித்தனம் செய்து வந்தார். நான் படிக்கவில்லை. என் கணவர் 7ம் வகுப்பு படித்துள்ளார். சிவராஜ்ஜின் இறப்பு பலனில் ரூ.30,00,000/- என் கணவரிடம் கொடுத்தார்கள். அஞ்சல் துறை மூலம் ரூ.5,00,000/- என் கணவரிடம் கொடுத்தார்கள் என்று சொன்னால் அது சரியல்ல. முதலமைச்சர் நிவாரண தொகையில் இருந்து 5 லட்சம் கொடுக்கப்பட்டது என்று சொன்னால் கொடுக்கப்பட்டது. அந்த பணங்களை வைப்பீடு செய்துள்ளாக காட்ட ஆவணம் எதுவும் இதுவரை தாக்கல் செய்யவில்லை. நானும் என் கணவரும் மைனர் ஹர்சன் மற்றும் தன்வின் பெயரில் சொத்து வாங்கியுள்ளோம். சுடுகாட்டிற்கு அருகே உள்ள சொத்தை எவ்வளவு ரூபாய்க்கு வாங்கினோம் என்று கேட்டால் 30 லட்சத்திற்கு வாங்கினோம். அதில் ரூ.45,000/- மட்டுமே மதிப்பு போடப்பட்டுள்ளது என்று சொன்னால் எனக்கு படிக்க தெரியாது. நான் குழந்தைகளுடைய நலனக்கு எதிராக பணத்தை வீணடித்துள்ளேன் என்று சொன்னால் அது சரியல்ல. எதிர்மனுதாரர் வீட்டில் உள்ளவர்கள் படித்தவர்கள் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. குழந்தையை பார்க்கவிடவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. எதிர்மனுதாரர்கள் தான் பார்க்க வரவில்லை. வயோதிகம்

காரணமாக எங்களால் சரியாக குழந்தைகளை பராமரிக்க முடியாது என்று சொன்னால் எனக்கு 2 மருமகள்கள் உள்ளனர். அவர்கள் படிக்க வைப்பார்கள். நானும், எனது கணவரும், மருமகள்களும் கவனித்து கொள்வார்கள். என்னுடைய மகன்களுக்கும், மருமகள்களுக்கும் குழந்தைகள் உள்ளதால் மனுவில் கோரியுள்ள இளவர்களை அவர்களால் சரியாக பராமரிக்க இயலாது என்று சொன்னால் அது சரியல்ல. மருமகள்கள் வெவ்வேறு வீட்டில் குடியிருக்கிறார்கள். ஆனால் பக்கத்தில் குடியிருக்கிறார்கள். மனுவில் குறிப்பிட்டுள்ள இளவர்கள் செக்காணூரணி அருகே கே.புளியங்குளத்தில் கேரன் பள்ளியில் படிக்கிறார்கள். எங்கள் வீட்டில் இருந்து அந்த பள்ளி சுமார் 10 கி.மீ தூரத்தில் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. 3 கி.மீ தூரம் இருக்கும்.

Sd/- சுந்தம்மாள்

திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

Sd/- G.Muthukumaran
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
மதுரை.